என்ற உண்மையை சிலாகித்து மட்டுமே பார்ப்பது முழுமையான பார்வை அல்ல.  உற்பத்தி உறவுகளில், நில உடமை உறவுகளில் மாற்றம் காணாமல் கிராமப்புற உழைப்பாளி மக்களின் வாழ்வில் நிலைத்தகு முன்னேற்றம் காண இயலாது.  பொது விநியோக அமைப்பும் சேமநல திட்டங்களும் தமிழகத்தின் சிறப்பு அம்சங்கள் என்றாலும், இவை மட்டுமே நீண்ட கால வாழ்வாதார உத்தரவாதமாக இருக்க முடியுமா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.  நடப்பில் உள்ள இந்த அம்சங்களும் யாருடைய கொடையும் அல்ல; வர்க்கப்பார்வையுடன் நடத்தப்பட்ட வர்க்க  வெகுஜன அமைப்புகளின் தொடர்ந்த போராட்டங்கள் இத்தகைய ஏற்பாடுகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தன என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம். கிராமப்புற பொருளாதாரமும் ஒட்டுமொத்த தமிழக பொருளாதாரமும் மக்கள் நலன் சார்ந்து மேம்பட, விவசாயத்தில் உற்பத்தி சக்திகள் வேகமாக வளர்வது அவசியம் என்பதையும், அதன் பயன் அனைத்து மக்களையும் சென்று அடைய வேண்டுமென்றால், உற்பத்தி உறவுகளும் மாற வேண்டும்  என்பதையும், நாம் உணர முடிகிறது. இதோடு, வேளாண் ஆதரவு பொதுகட்டமைப்புகள் – மின்சாரம், பாசனம், விரிவாக்கப்பணி அமைப்பு, வேளாண் ஆராய்ச்சி அமைப்பு, விளைபொருள் சேமிப்பு கிடங்குகள், ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் – போன்றவை வலுப்படுத்தப்பட்டு சிறு, குறு விவசாயிகளை எளிதில் சென்றடைவதும் அவசியம். ஒன்றிய அரசின் வேளாண் கொள்கைகளை எதிர்த்த தொடர்ந்த போராட்டமும் மாநில அரசின் முனைவுகளும் முக்கியம்.

### செய்ய வேண்டியவை

தற்போது தொழிற்சங்க கூட்டமைப்புகள் மற்றும் விவசாய சங்க கூட்டமைப்புகளின் நெருக்கமும் கூட்டு செயல்பாடுகளும் முன்னேறியுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்த அம்சம். இது மேலும் வலிமை பெற வேண்டும். மேலும்,

இடதுசாரி கண்ணோட்டம் உள்ள  தொழிற்சங்க – விவசாய –  விவசாய தொழிலாளி அமைப்புகள் அகலப்பட வேண்டும்; ஆழப்பட வேண்டும்.

ஊரக பாட்டாளிகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும். தொழிற்சங்கம், விச, விதொச இதில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதன் மூலம் ஊரக பணக்கார வர்க்க கூட்டணியை (Rural Rich Nexus)  எதிர்கொள்ள முடியும்.

மேற்கூறிய பகுதியினரை உள்ளடக்கிய  இதர அமைப்புகளுடன் கூட்டு செயல்பாடுகள் பலப்பட வேண்டும்.

இரண்டு கூட்டமைப்புகளும் தொழிலாளிகளின் முன்னேற்றம், மக்களின் வாழ்வுரிமை, விவசாயிகளின் நில உரிமை, நில சீர்திருத்தங்கள் – விநியோகம், நியாய விலை உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக நீடித்த போராட்டங்களை நடத்திட வேண்டும்.

சங்க உறுப்பினர்களுக்கு வர்க்க உணர்வை போதிக்க வேண்டும்; அதனை அரசியல் உணர்வாக்குவதில் கட்சி கமிட்டிகள் பங்களிக்க வேண்டும். (உதாரணமாக, மோடி ஆட்சியின் மீதான கோபம் தாமாக முதலாளித்துவத்துக்கு எதிரானதாக திரும்பாது.)

1982 தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள் என்கிற கட்சியின் ஆவணம் இது குறித்து ஏராளமான விவரங்களை முன்வைக்கிறது. குறிப்பாக “விவசாயிகளுடன், விவசாய தொழிலாளிகளுடன் முன்னெப்போதையும் விட மிக அதிகமாகவும், நேரடியாகவும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஆதரவும் உதவியும் தேவைப்படும் நேரத்தில் தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் தலையிடவில்லை என்றால், அது  துரோகம் ஆகும். விவசாயி, விவசாய தொழிலாளிகளின் கோரிக்கைக்கு தொடர்ந்து நீடித்த ஆதரவை தரவில்லை என்றால், தொழிலாளி – விவசாயி கூட்டணிக்கான வாய்ப்பு ஒருபோதும் ஏற்படாது” என திட்டவட்டமாக கூறுகிறது.

மேலும் “தொழிலாளி வர்க்கத்தின் தலைமை பாத்திரம் விவசாயிகளை விவசாய புரட்சியை நோக்கி அழைத்துச் செல்வதிலேயே பிரதானமாக அடங்கியுள்ளது” என சுட்டிக்காட்டுகிறது.

இதனைக் கையாளும்போது சாதிய பாகுபாடு, பாலின பாகுபாடு போன்ற பிரச்சனைகள் வந்து மோதும். பிரிவினைவாதம், சாதிவெறி, மதவெறி, மண்ணின் மைந்தர்கள் முழக்கம், இந்து தேசியம், தமிழ் தேசியம் போன்றவை தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமைக்கு, அதே போல் தொழிலாளி – விவசாயி கூட்டணிக்கு ஊறு விளைவிப்பதாக அமையும். இவற்றை எதிர்கொள்ளும் அரசியல் பக்குவத்தை தொழிலாளி வர்க்கத்திற்கு ஊட்ட வேண்டும்.


### ஆதாரம்

❍ *தொழிற்சங்க அரங்கில் நமது கடமைகள்*

❍ *1982 கட்சி திட்டம்*

❍ *எங்கல்சும் தொழிலாளி விவசாயி கூட்டணியும் – பிரபாத் பட்நாயக்*

❍ *தொழிலாளி விவசாயி கூட்டணி –  லெனின்*

❍ *நவீன தாராளமயக் கொள்கைகளும் தொழிலாளி விவசாயி கூட்டணியும் –  பிரபாத் பட்நாயக்*

❍ *கூட்டு இயக்கங்களில் அகில இந்திய விவசாய சங்கத்தின் பங்கு – AIKS கமிஷன் பேப்பர் – அஷோக் தாவ்லே*


■



# மோடி அரசின் பத்தாண்டுகள் பொய்களின் ஊர்வலம்


**க.சுவாமிநாதன்**


நரேந்திர மோடி அரசின் பல திட்டங்கள், சாதனைகள் பற்றிய பிரச்சாரங்கள் உண்மையை விட்டு வெகு தூரத்தில் உள்ளன. கார்ப்பரேட் ஊடகங்களும் அரசின் பிரச்சாரத்துக்கு துணை போகின்றன. மக்களின் வாழ்க்கை அனுபவங்கள் பிரச்சாரத்தின் பொய்மையை தோலுரிப்பதால், உண்மையை அரை மனதோடு சொல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஊடகங்கள் ஆளாகின்றன.

#### பிரச்சாரம் – 1

கார்ப்பரேட் வரி வசூல் அதிகரித்துள்ளது.

ஜி.எஸ்.டி வரி தளத்தை விரிவாக்கியுள்ளோம். வரி வசூலிலும் சாதனை அளவை எட்டியுள்ளோம்.

#### உண்மை

இதில் கொண்டாடுவதற்கு ஏதுமில்லை.

கார்ப்பரேட் வரிகள் 2014 இல் 33 சதவீதமாக இருந்தது. 10 ஆண்டு ஆட்சியில் 22 சதவீதமாக குறைக்கப்பட்டது. புதிய நிறுவனங்களுக்கு 15 சதவீதம் வரை கூட குறைக்கப்பட்டது. இவ்வளவு பெரிய பரிசை சுதந்திர இந்தியாவில் இவ்வளவு குறுகிய காலத்தில் பெரு முதலாளிகள் பாஜக ஆட்சி காலத்தில்தான் பெற்றுள்ளார்கள். ஒரு சதவீதம் கார்ப்பரேட் வரிக் குறைப்பு எனில் சுமார் 50000 கோடி. 11 சதவீதம் குறைப்பு எனில் 5,50,000 கோடி சலுகை என்று அர்த்தம். 2006 லிருந்து “அரசு வருவாய் இழப்பு அறிக்கை” (*Statement of Revenue Foregone*) என்பது பட்ஜெட் உடன் இணைத்து சமர்ப்பிக்கப்படும். அந்த தலைப்பே பல லட்சம் கோடிகள் பெரும் தொழிலதிபர்களுக்கு மடை மாற்றம் ஆவதை அம்பலப்படுத்தி விடுமென்பதால் மோடி ஆட்சி அதன் பெயரை “வரி ஊக்குவிப்பின் வருவாய் விளைவு அறிக்கை” (*Statement of Revenue Impact of tax incentives*) என்று மென்மையாக மாற்றியது. 2016 லிருந்து இழக்கும் வருவாயை மதிப்பிடும் அளவு கோல்களையும் மாற்றியது.

ஆனால் இவ்வளவு கார்ப்பரேட் வரிச் சலுகைகள் தந்தும் தனியார் முதலீடுகள் பெரிதாக உயரவில்லை. வரிச் சலுகைகளுக்கு பிறகும் இவ்வளவு வசூல் ஆவதற்கு காரணம் பெரிய கார்ப்பரேட்டுகள் குவிக்கும் லாபம்தான். 2022 கோவிட் தாக்கம் கடுமையாக இருந்த போது 5000 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரி செலுத்திய 21 டாப் பெரு நிறுவனங்கள் மொத்த 4300 பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் செலுத்திய கார்ப்பரேட் வரிகளில் 46.5 சதவீதத்தை செலுத்தி இருந்தன.

(எகனாமிக் டைம்ஸ், ஜூன் 24, 2023).

இதில் சட்டத்தின் ஓட்டைகளுக்குள் புகுந்து தப்பிக்கிற தனிக் கணக்கு இந்த கணக்குகளுக்குள்ளேயே வராது. ரூ 55461 கோடி வரிக்கு முந்தைய லாபத்தை 2021 நிதியாண்டில் ஈட்டிய ரிலையன்ஸ் குழுமம் செலுத்திய வரி ரூ 1722 கோடி மட்டுமே. சதவீத கணக்கில் 3 சதவீதம்தான். அதே ரிலையன்ஸ் 2020 நிதியாண்டில் கட்டிய கார்ப்பரேட் வரிகள் 13726 கோடி. எப்படி அடுத்த ஆண்டில் 87% குறைந்தது? இந்த கேள்வியை இந்து பிசினஸ் லைன் (டிசம்பர் 6, 2021) வணிக இதழே எழுப்பியது.

வருமான திரட்டலில் பாஜக இன்னொரு சாதனையைப் படைத்துள்ளது.

கார்ப்பரேட் வரி வசூலை விட தனி நபர் வருமான வரி வசூல் அதிகமாகி இருக்கிறது. 2023 நிதி யாண்டில் தனி நபர் வருமான வரி வசூல் 8.33 லட்சம் கோடி. கார்ப்பரேட் வரி வசூல் 8.25 லட்சம் கோடி. அப்படியே 10 ஆண்டுகளுக்கு முன்னால் போய் பாருங்கள். கார்ப்பரேட் வரி வசூல் தனி நபர் வருமான வரியை விட இரண்டு மடங்கு இருந்தது. 2012 நிதியாண்டில் தனி நபர் வருமான வரி வசூல் 1.61 லட்சம் கோடி. கார்ப்பரேட் வரி வசூல் 3.28 லட்சம் கோடி. கார்ப்பரேட்டுகள் பாஜக வை கட்டித் தழுவுவதன் ரகசியம் இதுதான். தேர்தல் பத்திர பிரச்சினையில் தேள் கொட்டிய திருடன் போல தேர்தலுக்கு முன்பு ரகசியம் வெளி வராமல் அமுக்கப்பார்ப்பதும் அதனால்தான்.

அடுத்து நேரடி வரி - மறைமுக வரி. ஒன்றிய அரசு போடுவதில் 51.5 சதவீதம் நேரடி வரிகள். என்றாலும் மாநில அரசுகள் நேரடி வரி போட முடி யாது எனும் போது அவை போடும் வரிகளை சேர்த்தால் பாதிக்கு மேல் - மூன்றில் இரண்டு பங்கு வரை கூட - மறைமுக வரிகள்தான். ஓ.இ.சி.டி என்று அழைக்கப்படும் வளர்ந்த நாடுகளில் இது அப்படியே தலை கீழே உள்ளது. அங்கே எல்லாம் மூன்றில் இரண்டு பங்கு நேரடி வரிகள்தான்.

ஜி.எஸ்.டி வரி முறைமை இன்னும் ஏழை களை குறி வைக்கிறது. கடந்த ஆண்டு ஜி.எஸ்.டி வசூல் 14.7 லட்சம் கோடி எனில் அதில் 64 சதவீதம் (8.82 லட்சம் கோடி) வருமான அடுக்கில் கீழுள்ள 50 சதவீத மக்களிடம் கறந்து இருப்பதுதான். டாப் 10 சதவீத பணக்காரர்கள் தந்துள்ள ஜி.எஸ்.டி வரிகள் வெறும் 3 சதவீதம் ( 42000 கோடி மட்டுமே) என்று "ஆக்ஸ்பாம்" அறிக்கை கூறுகிறது. (தி இந்தியன் எக்ஸ்பிரஸ் 16.01.2023).

•••

**பிரச்சாரம் – 2**

இந்திய இளைஞர்களை வேலை தேடுபவர்கள் (Job Seekers) என்ற நிலையில் இருந்து வேலை தருபவர்கள் (Job Givers) என்ற நிலைக்கு இந்த அரசு மாற்றியுள்ளது.

**உண்மை**

இது உலகப் பொருளாதார அமைப்பு கூட்டம் ஒன்றில் ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் சொன்ன கருத்து. இந்தியாவின் பெரும் தொழி லதிபர்களில் ஒருவர் சுனில் பாரதி மிட்டல் அந்த கூட்டத்தில் "நான் டாப் 200 நிறுவனங்களின் வேலை உருவாக்கம் பற்றி ஆய்வு செய்து பார்த்ததில் அதிர்ச்சி அடைந்தேன். அந்த நிறுவனங்கள் நிகர வேலை உருவாக்கம் எதையும் செய்யவில்லை. இப்படி இருந்தால் எப்படி நம்மோடு சமூகத்தை அழைத்து செல்ல முடியும்?" என்று பேசினார்.

அதற்கு பதில் அளித்த பியூஷ் கோயல், "மிட்டல் கவலைப்பட வேண்டாம். இந்திய இளை ஞர்கள் வேலை தேடுபவர்கள் (Job Seekers) என்ற நிலையில் இருந்து வேலை தருபவர்கள் (Job Givers) என்ற நிலைக்கு மாறி விட்டார்கள். அவர்களே தொழில் துவங்கும் முனைப்புடன் இருப்பதால் வேலை தேடுவதில்லை. லே ஆப் என்பது கூட நல்ல அறிகுறிதான்" என்றார். (அக்டோபர் 5, 2017 - தி இந்து)

ஒரு தொழிலதிபரே ஒப்புதல் வாக்குமூலம் தந்த போதும் அந்த உண்மையை மறைக்க அமைச்சர் முயற்சித்தார். ஆனால் அவரின் செயற்கைப் பூச்சு "ஸ்டார்ட் அப் இந்தியா" திட்டத்தில் வெளிறிப் போய் விட்டது.

இந்திய இளைஞர்கள் தொழில் முனைவோர் ஆக முன்னேறுகிறார்கள் என்று தம்பட்டம் அடித்த திட்டம் "ஸ்டார்ட் அப் இந்தியா".

ஆனால் 95 சதவீதம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தோல்வி அடைந்து விட்டன என்று 2018 லிலேயே நிதி ஆயோக் உறுப்பினர் விவேக் தேவ் ராய் கூறினார். (எகனாமிக் daims- மே 11, 2018). 2023 வரை இதுதான் நிலைமை என்று டைம்ஸ் ஆப் இந்தியாவின் டிசம்பர் 14, 2023 செய்தி தெரிவிக்கிறது.

ஆனால் இந்திய இளைஞர்கள் வேலை தரு பவர்களாக மாறி விட்டார்கள் என்று சொன்ன ஆட்சியாளர்கள் கொஞ்சமும் வெட்கப்பட வில்லை. கார்ப்பரேட் ஊடகங்கள் "தொழில் முனைவு திறன் உள்ளவர்கள் தோல்வி அடைவ தில்லை" என்று முட்டுக் கொடுத்தன. என்ன அர்த்தம்? தோல்வி அடைந்த 95 சதவீதம் பேரும் "தொழில் முனைவு திறன் அற்றவர்கள்".

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இப்படி தோல்வி அடைப்பவர்களுக்கு தந்த ஆறுதல் என்ன தெரியுமா? "உங்கள் தொழில் சரிப்பட்டு வராவிட்டால் அதை மூடுவதற்கு யோசிக்கா தீர்கள். மூடி விட்டு புதிய தொழில்கள் துவங்கு வது பற்றி யோசியுங்கள்".

முதலில் "வேலை தருபவர்" என்ற பட்டம். பிறகு "தொழில் முனைவு திறன் அற்றவர்" என்று மட்டம். அதற்கு பிறகு "மூடி விட்டு மீண்டும் துவங்கு" என்று ஆறுதல் கூறி அடுத்த கட்டம்.

எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்!

•••

**பிரச்சாரம் – 3**

"மேக் இன் இந்தியா" வின் வெற்றிக்கு சாட்சி யம் மொபைல் போன் உற்பத்தி. 2014 இல் 78 சத வீதமான மொபைல் போன்கள் இறக்குமதி ஆகி வந்தன. ஆனால் 2023 இல் இந்தியாவில் விற்பனை ஆகும் 99.2 மொபைல் போன்கள் "மேட் இன் இந்தியா முத்திரை பெற்றவை" என்பது பெருமை.

**உண்மை**

இது அமைச்சர் அஸ்வின் வைஸ்னவ் வார்த்தைகள். (எகனாமிக் டைம்ஸ் 25.11.2023).

இதுகுறித்து ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜன் எழுப்பிய கேள்விகள் முக்கியமானவை.

2018இல் இறக்குமதி வரிகளை அதிகரித்த தும், உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை (Production Linked Incentive - PLI) வழங்கப்பட்டதும்தான் இந்த திருப்பத்திற்கு காரணம் என்பது அரசின் வாதம்.

**ரகுராம் ராஜன் எழுப்பும் கேள்விகள்**

1) இந்தியாவில் இருந்து உற்பத்தி முழுமையடை யும் மொபைல் போன் ஏற்றுமதியாவதும், உள் நாட்டில் இறக்குமதி சாரா தன்னிறைவை எட்டி யுள்ளதாகவும் அரசு கூறும் நிலையில் மொபைல் போன் உற்பத்திக்கு தேவையான உட் பொருள் கள் (Inputs) இறக்குமதி அதிகரித்துள்ளதா இல்லையா?

2) இந்தியா உற்பத்தி மையமாக மாறி உள்ளதா? வெவ்வேறு பகுதிகளை இணைக்கிற மையமாக மாறி உள்ளதா?

3) எவ்வளவு "மதிப்பு கூட்டல்" இந்தியாவில் நடைபெறுகிறது?

4) "உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத் தொகை" - மதிப்பு கூட்டல் தொகை மீது வழங்கப்படு கிறதா? உற்பத்தி முழுமை அடைந்த மொபைல் போன் விற்பனை விலை மீது வழங்கப்படுகிறதா?

இந்த கேள்விகளை ஒரு எழுத்து பூர்வமான குறிப்பின் மூலம் எழுப்பினார். ( பிசினஸ் டுடே - 30.05.2023). ஆனால் இதற்கு பதில் சொல்வதற்கு பதிலாக ரகுராம் ராஜன் மீது ஆளுங்கட்சி பிரமுகர்கள், துறை அதிகாரிகள் பாய்ந்தார்கள்.

உண்மையில் இறக்குமதி குறையவில்லை. மொபைல் போன் இறக்குமதிக்கு பதிலாக மொபைல் போன் அங்கங்களின் இறக்குமதி அதிகரித்துள்ளது. செமி கண்டக்டர்கள், பிரின்டட் சர்க்யூட் அசெம்பிளி (PCBAs), டிஸ்பிளே, கேமரா, பாட்டரி ஆகியவற்றின் இறக்குமதி திடீர் உயர்வை கண்டுள்ளன.

இந்தியா "உற்பத்தி மையம்" என்ற நிலையை எட்டி விட்டதாக கூற இயலாது. "அங்கங்களை இணைக்கும் மையமாக" மாறி இருக்கிறது என்று சொல்லலாம். ஆப்பிள், சாம்சங் போன்ற நிறுவனங்கள் மலிவான உழைப்பு இந்தியாவில் கிடைப்பதால் இங்கு "உற்பத்தி" தளங்களை கொண்டுள்ளன. இதை விட மலிவான உழைப்பு கிடைக்கிற பட்சத்தில் அந்த நாடுகளுக்கு கூட எதிர்காலத்தில் நகரக் கூடும்.

மதிப்பு கூட்டல் 4 முதல் 5 சதவீதம் வரைதான் இந்தியாவில் நிகழ்கிறது. ஆனால் உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத் தொகை 6 சதவீதம் வரை விற்பனை தொகையில் வழங்கப்படுகிறது. மதிப்பு கூட்டல் தொகையின் மீது அல்ல. காரணம் உலக வர்த்தக அமைப்பின் விதிகள், மதிப்புக் கூட்டலை அடிப்படையாக கொண்டு ஊக்கத் தொகை வழங்குவதை அனுமதிக்க வில்லை. ஆகவே "சுண்டைக்காய் காற்பணம், சுமை கூலி முக்காற்பணம்" என்பது போல 4 சதவீத மதிப்பு கூட்டல் நிகழும் போது 6 சதவீத ஊக்கத் தொகை விற்பனை மதிப்பில் தரப்படுகிறது.

ஆகவே மேக் இன் இந்தியா என்பது மலிவான உழைப்பை பன்னாட்டு மூலதனம் அனுபவிப்ப தற்கே, அதிலும் ஊக்கத் தொகையையும் சேர்த்து என்பதே உண்மை.

•••

**பிரச்சாரம் – 4**

உஜ்வாலா இலவச கேஸ் அடுப்பு திட்டம், விறகு அடுப்பில் வெந்து கொண்டிருந்த பெண்களை விடுவித்துள்ளது.

**உண்மை**

கேஸ் அடுப்பு தானாக எரிவதில்லையே. சமையல் கேஸ் விலைகள் செங்குத்தாக கடந்த 10 ஆண்டுகளில் உயர்ந்துள்ளன. 2014 இல் ரூ. 410.50 ஆக இருந்த சமையல் கேஸ் சிலிண்டர் விலைகள் ஒரு கட்டத்தில் ரூ 1100 வரை கூட உயர்ந்தது. மக்கள் மத்தியில் கடும் கோபம் எழுந்த நிலையில் ரூ 200 மானியம், இப்போது கூடுதலாக ரூ 100 மானியம் என்று அறிவிக்கப்பட்டா லும் 2014 விலை உடன் ஒப்பிடும் போது மக்களின் கைகளுக்கு எட்டாத உயரத்தில் தான் கேஸ் விலைகள் உள்ளன.

இது ஆகஸ்ட் 31, 2023 அன்று "தி இந்து" ஆங்கில நாளிதழ் ஆர்.டி.ஐ பதில் அடிப்படை யில் வெளியிட்ட செய்தி.

"உஜ்வாலா திட்ட பயனாளிகளில் 1.18 கோடி பேர் 2022 -23 இல் ஒரு சிலிண்டர் கூட வாங்க வில்லை. 1.51 கோடி பேர் ஒரே ஒரு சிலிண்டரை மட்டுமே வாங்கி உள்ளார்கள். இது ரூ 200 மானியம் வழங்கப்பட்ட பின்னும் இருக்கிற நிலைமை."

இப்போது ரூ 100 கூடுதலாக மானியம் வழங்கப் பட்டாலும் இந்த 2.69 கோடி இல்லங்கள் சிலிண்டரை வாங்கும் சக்தி கொண்டவர்களாக மாறி விடுவார்கள் என்பதற்கு என்ன உத்தர வாதம்? 2.69 கோடி இல்லங்கள் சராசரியாக 5 பேரைக் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் 13 கோடி பேரின் வாழ்நிலை அவலம் இதுதான் என்ற முடிவுக்கு வரலாம்.

பாஜக வின் கதையாடல்களுக்கு எதிர்க் கதை யாடல்கள் தரவுகளோடு தேர்தல் களத்தில் முன் வைக்கப்பட வேண்டியுள்ளது. கார்ப்பரேட்டுகளை பொறுத்தவரையில் இந்த அரசு வாராது வந்த மாமணி போன்றதுதான். சுதந்திர இந்தியாவில் இந்த 10 ஆண்டுகள் அவர்களைப் பொறுத்த வரையில் அமிர்தகாலமும் ஆகும்.

http://marxistreader.app

http://marxistreader.app